பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 26 (10—8—72) வியாழன் வெளியூர்: ஆடி 27 (11-8—72) வெள்ளி [இதழ்: 49

வாழ்க்கைச் செலவு உயர்வு

அகில இந்திய வாழ்க்கைச் செலவின் 12 மாத சராசரி குறியீட்டு எண் 1972 ஜூனில் 237 புள்ளிகளாக உயர்ந்திருக்கிறது; மே மாதம் அது 235 ஆக இருந்தது.

ஜூலையில் அது 238 புள்ளிகளை எட்டியிருக்க வேண்டும் அல்லது கடந்திருக்க வேண்டும்; இது, விலைவாசிப் புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது.

12 மாத சராசரி அகில இந்திய வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் 238 புள்ளிகளை அடையும்போது, தன்னுடைய ஊழியர்களுக்குக் கிராக்கிப் படியை மத்திய அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

ஏழை மக்கள் வாழ்வு இன்னும் மலரவில்லை

இருபது ஆண்டுகளுக்குப் பின்னரும் அதே நிலையில்தான் உள்ளனர்

மத்திய அமைச்சரே ஒப்புக்கொள்கிறார்

வேலையின்மை -- விநியோகப் பிரச்சினைகளை நேரடியாகச் சமாளிக்க வேண்டும் என்று கருத்துரை

புதுடில்லி, ஆக. 10--

'வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை -- வருமான விநியோகப் பிரச்சினை ஆகியவற்றை நேரடியாகச் சமாளிக்காமல் வளர்ச்சியை மட்டும் நம்பியிருப்போமானால், ஏழைகள் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளைப் பெற இன்னும் 30 அல்லது 40 ஆண்டுகள் ஆகக்கூடும்.

"குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளைப் பெற ஏழைகள் இவ்வளவு நீண்டகாலம் காத்திருக்குமாறு செய்வது விரும்பத்தக்கதல்ல -- அது இயலக்கூடியதும் அல்ல"

என்று திட்டத் துணையமைச்சர் மோகன் தாரியா, கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் சுட்டிக்காட்டியதாவது:--

"இந்தியாவில் ஏழ்மையின் அடிமட்டத்தில் உழல்பவர்களின் எண்ணிக்கை இருபது ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு அளவில் இருந்ததோ அதே அளவில் இன்றைக்கும் இருக்கிறது.

ஏழ்மையின் அடிமட்டத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கை இந்திய மக்கள் தொகையில் ஐந்தில் இரண்டு பங்குமுதல் இரண்டில் ஒரு பங்குவரையில் இருக்கக்கூடும் என மதிப்பிடப்படுகிறது.

குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகள் எட்டாத நிலையில் வாழ்பவர்கள் 'ஏழை'கள் என நிர்ணயிக்கப்படுகிறார்கள்; ஏழைகளிலும் பரம ஏழைகளாக இருப்பவர்கள் 'ஏழ்மையின் அடிமட்டத்தில் உழலுபவர்கள்' என்று விவரிக்கப்படுகிறார்கள்.

வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிப்பதுடன் வேலையில்லாத் திண்டாட்டம் -- ஏழ்மை ஆகியவற்றின்மீது நேரடித் தாக்குதல் நடத்துவதை இயலக்கூடியதாக்கும் கட்டத்தை இந்தியப் பொருளாதாரம் இப்போது அடைந்திருக்கிறது; எனவே ஐந்தாண்டுத் திட்டத்தின் நேரடி நோக்கமாக ஏழ்மை ஒழிப்பு அமைவது அவசியமாகும்."

சட்டத்தின்முன் அனைவரும் சமம்

பழிச் சொல்லுக்கு எதிர்கால சமுதாயம் ஆளாகக் கூடாது

அமைச்சர் நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 9—

ஐ.சி.எஸ். அதிகாரிகளின் சலுகைகளை அகற்றுவதற்கான அரசியல் சட்டத் திருத்த (28 வது திருத்தம்) மசோதாவுக்குத் தமிழ்நாட்டு சட்டமன்ற மேலவை ஒப்புதல் அளித்தது; இது ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகும்.

கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

இதன்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"எதிர்காலச் சமுதாயத்தினரின் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இருக்கவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய திருத்தம், 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்' என்ற நிலையை உறுதி செய்கிறது."

இத்துடன், அவையை, ஆகஸ்டு 18-ம் நாளுக்கு அவைத் தலைவர் சி. பி. சிற்றரசு அவர்கள் ஒத்தி வைத்தார்.

சேலம் உருக்காலை அமைப்பதில் தாமதமா?

தமிழ்நாடு அரசின் மீது பழிசுமத்துவது சரியல்ல!

சட்டப்பேரவையில் தொழில் அமைச்சர் செ மாதவன் விளக்கம்

சென்னை, ஆக. 10--

"சேலம் உருக்காலை அமைப்பதில் காலதாமதத்திற்கு எந்தவிதக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை, தமிழக அரசு போதிய நிலம் கையகப்படுத்தித் தரவில்லை என்று கூறப்படுவதிலும் உண்மை இல்லை"

என்று, தமிழகத் தொழில் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், இன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

சேலம் உருக்காலை பற்றிக் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகட்கும் அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"சேலம் உருக்காலை பற்றிய ஆய்வு அறிக்கையைத் தஸ்தூர் நிறுவனம் 1971 நவம்பரில் மத்திய அரசுக்கு அளித்தது; எந்தெந்தப் பொருள்களைச் சேலத்தில் உற்பத்தி செய்தால் இலாபகரமாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'முதல் கட்டமாக ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தயாரித்தால் இலாபகரமாக இருக்கும்' என்று கூறப்பட்டுள்ளது; தஸ்தூர் நிறுவன அறிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

எந்தெந்தப் பொருள்களை உற்பத்தி செய்யலாம் என்பதை ஆராய்ந்து முடிவு செய்வது ஒன்றைத் தவிர, காலதாமதத்துக்கு வேறு காரணம் இல்லை.

'தமிழ்நாடு அரசு நிலம் கையகப்படுத்திக் கொடுக்கவில்லை -- அதனால்தான் காலதாமதமாகிறது' என்று மத்திய அமைச்சர் எவரும் சொல்லியிருக்கக்கூடும் என்று நான் நம்பவில்லை; மத்திய அமைச்சர்கள் சொன்னதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியிடுவது, 'நோக்கம்' கற்பிப்பதாகும்."

[சேலம் உருக்காலைக்காகத் தமிழக அரசு எவ்வளவு நிலம் கையகப்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது என்ற விவர அறிக்கையையும் அமைச்சர் அவையில் அளித்தார்.]

குடியரசுத் தலைவருக்கு கலைஞர் வாழ்த்து

சென்னை, ஆக. 10 –

இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி.வி. கிரி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டுத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமது நல்வாழ்த்தினைத் தந்தி மூலம் தெரிவித்துள்ளார்.

"தங்கள் பிறந்தநாளில் எனது இதயபூர்வமான பாராட்டினையும் நல்வாழ்த்துக்களையும் காணிக்கையாக்குகிறேன்"

என்று அந்த வாழ்த்துச் செய்தியில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகச் சட்டமன்றத்தில் காங்கிரசுப் பெயர்த் தகராறு

அனந்தநாயகி--பொன்னப்ப நாடார் வாக்குவாதம் -- முதலமைச்சரின் யோசனை ஏற்கப்பட்டது

சென்னை, ஆக. 10—

இன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும், சழக உறுப்பினர் திரு. ந. வீராசாமி எழுந்து ஒரு விளக்கம் கோரினார்; திருமதி அனந்தநாயகி இடம் மாறி உட்கார்ந்திருப்பதால் அவர் எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பதையும், அவர் சார்ந்துள்ள கட்சிக்கு என்ன பெயர் என்றும் அவைக்கு அறிவிக்குமாறு அவர், பேரவைத் தலைவரிடம் கோரினார்.

உடன் பேரவைத் தலைவர் திரு மதியழகன் அவர்கள், பின்வருமாறு கூறினார்:—

"திருமதி அனந்தநாயகி மட்டுமல்ல -- இன்னும் சிலரும் பி. சோ. கட்சியிலிருந்து விலகி, அனந்தநாயகி சேர்ந்துள்ள அந்தக் கட்சியில் சேர்ந்துள்ளனர்; வெளியிலே அந்தக் கட்சிக்கு என்ன பெயர் இருந்தாலும், சட்டப்பேரவைக்குள் அது என்ன கட்சி என்று இன்னும் முடிவாகவில்லை; 'தமிழ்நாடு சட்டமன்றக் காங்கிரசுக் கட்சி' என்ற பெயரில், அக்கட்சியின் தலைவராக வெளியிலேயுள்ள திரு. ஏ. பி. சி. வீரபாகு எனக்குக் கடிதம் எழுதியுள்ளார்; சட்டமன்றத்தில் அக்கட்சியின் தலைவராக திரு. ஏ. ஆர். மாரிமுத்துவும், துணைத் தலைவராக திருமதி டி. என். அனந்தநாயகியும் இருப்பார்கள்' என்றும் திரு. வீரபாகு தெரிவித்துள்ளார்.

திரு. பொன்னப்ப நாடார் தலைமையில் சட்டமன்றத்தில் இயங்கும் கட்சிக்கும் 'தமிழ்நாடு சட்டமன்றக் காங்கிரசுக் கட்சி' என்றுதான் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு கட்சிகளும் ஒரே பெயரில் இயங்குவதால் குழப்பம் ஏற்படும்; எனவே இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் இப்போதே அதுபற்றித் தங்கள் முடிவைத் தெரிவித்தால் நலமாக இருக்கும்."

பேரவைத் தலைவர் மேற்கண்டவாறு கூறியதும், திருமதி அனந்தநாயகி எழுந்து, "சங்கர் தயாள் சர்மா தலைமையில் உள்ள எங்கள் கட்சிதான் 'இந்திய தேசியக் காங்கிரசு' என்று தலைமை நீதிமன்றத்திலேயே தீர்ப்பாகியிருக்கிறது; எனவே, எங்கள் கட்சிதான் இந்திய தேசிய காங்கிரசு ஆகும்' என்றார்.

அடுத்து, திரு. பொன்னப்ப நாடார் எழுந்து, 'எங்கள் கட்சி, 'இந்திய தேசியக் காங்கிரசு' என்ற பெயரில்தான் தேர்தலில் போட்டியிட்டது; அந்தப் பெயரை மாற்றுவதற்கில்லை' என்றார்.

இதைத் தொடர்ந்து திருமதி அனந்தநாயகியும் -- திரு. பொன்னப்ப நாடாரும் மாறி மாறித் தங்கள் கருத்தையே வலியுறுத்திக் கொண்டிருந்தனர்.

இந்த வாக்குவாதங்களில் இந்திரா காங்கிரசைச் சேர்ந்த திரு. ஏ. சுப்பிரமணியமும், சிண்டிகேட்டைச் சேர்ந்த திரு. கே. எம். சுப்பிரமணியமும் கலந்துகொண்டு தத்தம் கட்சிகளுக்காக வாதாடினர்.

இந்நிலையில் முதலமைச்சர் கலைஞர் எழுந்து, இந்தத் தகராறு தீர ஒரு யோசனை கூறினார்.

"திரு. பொன்னப்ப நாடார் தலைமையில் உள்ள கட்சிக்கு 'ஸ்தாபன காங்கிரசு' என்றும்,

(4-ம் பக்கம் பார்க்க)

இரு பெருந் தலைவர்களில் ஒருவர் கலைஞர்

இரு பெருங் கட்சிகளில் ஒன்று தி. மு. கழகம்

தில்லை வில்லாளன் விளக்கம்

மதுரை, ஆக. 10—

"இந்தியாவில் உள்ள இரு பெருங் கட்சிகளில் ஒன்று தி. மு. கழகம்; இரு பெருந் தலைவர்களில் ஒருவர் முதலமைச்சர் கலைஞர்"

என்று நாடாளுமன்ற மேலவை தி. மு. குழுத் தலைவர் தில்லை வில்லாளன், மதுரை மாநாட்டில் விளக்கினார்; அவர் மேலும் கூறியதாவது :—

"தி. மு. கழகம் வட்டாரக் கட்சி என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால் அந்த வட்டாரக கட்சிதான் நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

அதற்கு அடுத்தபடியாகத்தான் அகில இந்தியக் கட்சிகளான ஜனசங்கமும், கம்யூனிஸ்டுக் கட்சியும் இருக்கின்றன.

அதேபோல், மக்களவையில் மூன்றாவது இடம் தி. மு. கழகத்திற்குத்தான்.

அதுமட்டுமல்ல -- ஒரு கட்சி வட்டாரக் கட்சியா, இல்லையா என்பதை அது எழுப்புகின்ற இலட்சியத்தை வைத்துத்தான் முடிவு கட்ட முடியும்.

தி. மு. கழகத்தின் தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஐதராபாத்தில், செய்தியாளர்களிடம், 'நான், மாநில சுயாட்சிக் கேட்பது தமிழகத்திற்கு மட்டுமல்ல -- இந்தியா முழுவதற்கும்தான் -- மாநிலங்கள் அனைத்திற்கும்தான்' என்று குறிப்பிட்டார்; அப்படியானால், தி. மு. கழகம் வட்டாரக் கட்சியா?

நாட்டிலே இன்றைக்கு இரண்டு பெரிய கட்சிகள் இருக்கின்றன; ஒன்று -- தி. மு. கழகம்; இன்னொன்று -- இந்திரா காங்கிரசு!

நாட்டிற்கு இரண்டு தலைவர்கள்; ஒருவர் கலைஞர் -- மற்றொருவர் -- தலைமையமைச்சர் இந்திரா.

அதற்கு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்; அண்மையில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், இந்திரா காங்கிரசுக் கட்சியின் நிலச் சீர்திருத்தம் பற்றிய அறிக்கை வைக்கப்படும் என்று அறிவித்ததை நமது முதலமைச்சர் எதிர்த்தார்; மாநாட்டில் கலந்துகொள்ள மறுப்புத் தெரிவித்தார்; அப்போது இந்திரா காந்தி, 'உங்கள் வருகை மதிப்பு உயர்ந்தது; உங்கள் வருகையால் நாட்டுக்கு நல்ல பலன் கிடைக்கும்' என்று எழுதினாரே -- அதன் பொருள் என்ன?

'இந்தியாவின் இரு பெரும் தலைவர்களில் ஒருவர் கலைஞர்' என்பதே அல்லவா!"

நிலக்கடலைப் பயிருக்குப் பாதுகாப்பு

தமிழக அரசின் விரிவான திட்டம்

சென்னை, ஆக. 8—

நிலக்கடலைப் பயிரைப் பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்குத் தமிழ்நாடு அரசு ஒரு விரிவான திட்டத்தை இந்த மாதம் முதற்கொண்டு செயல்படுத்தும்.

செங்கற்பட்டு, வட ஆர்காடு, தென் ஆர்காடு, கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஓர் இலட்சம் ஏக்கர் நிலத்தில் இந்த 'நிலக்கடலைப் பயிர் பாதுகாப்பு'த் திட்டம் செயல்படுத்தப்படும்.

நிலக்கடலைச் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலங்களில் பூச்சிக் கொல்லி மருந்தைத் தெளிக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வசதியும் ஏற்படும்; சுமார் 15 முதல் 20 நாட்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதற்கு சுமார் 5,000 ஊழியர்கள் தேவைப்படுவர்.

இந்தப் பூச்சிக்கொல்லி மருந்தைத் தெளிக்க ஓர் ஏக்கருக்கு ஏழரை ரூபாய் செலவாகும்; தமது நிலத்தில் தேவையான பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கப்பட்டதா என்பதை விவசாயிகள் அறிந்துகொள்ளவும் வசதி இருக்கும்

குமாரமங்கலத்தின் ஆசை நிறைவேறாது

இந்த அரசை இழக்கத் தமிழ் மக்கள் ஒப்பார்

மா. முத்துசாமி தெளிவுரை

மதுரை, ஆக. 10—

"கழக அரசு நீடித்தால்தான் தமிழர் சமுதாயத்தின் வாழ்வு வளமாகும்; கழக அரசு வீழ்ந்தால், தமிழர்கட்கு விடிவு காலமில்லை.

"இந்த அரசு இல்லாமற்போனால், இனி 100 ஆண்டுகளுக்கல்ல -- ஆயிரம் ஆண்டுகளானாலும் தமிழ் மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு நல்லரசு கிடைக்காது -- புது வாழ்வு கிட்டாது"

என்று மதுரை மாநாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் மா. முத்துசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது :—

"எதிர் முகாமில் இருக்கின்றவர்கள் எல்லாம், 'கழக அரசு கவிழும் -- அதன் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் -- தொண்டர்கள் எல்லாம் தண்டிக்கப்படுவார்கள்' என்றெல்லாம் எண்ணுகிறார்கள் -- பேசுகிறார்கள்; அதெல்லாம் ஒருகாலும் நடக்காது!

நாம் மாநில சுயாட்சி கேட்கிறோம் என்றால், தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல -- அகில இந்தியாவிலும் உள்ள எல்லா மாநிலங்களும் வளமோடு வாழ வேண்டும் என்பதற்காகத்தான கேட்கிறோம்; இதில் வேறு யாரும் எந்தவித ஐயப்பாடும் கொள்ளத் தேவையில்லை.

மத்திய அமைச்சர்கள் எல்லாம் மாநில முதலமைச்சர்களாக ஆக்கப்படுகிறார்கள்; இதை மனத்தில் வைத்துக்கொண்டு மோகன் குமாரமங்கலம், 'மாநில முதலமைச்சராக வேண்டும்' என்று ஆசைப்பட்டு -- நம்மை ஏசிப் பேசுகிறார்.

அவருக்குச் சொல்லிக் கொள்வேன் -- 'செஞ்சிக் கோட்டை ஏறியவன் எல்லாம் தேசிங்கு ராஜாவாக முடியாது; இந்திராவின பக்கத்தில் இருப்பதாலேயே நினைத்ததெல்லாம் நடந்துவிடும் என்று கனவு காண வேண்டாம்' என்று!

"தி. மு. கழகம் மகத்தான மக்கள் சக்தியைத் தன்னகத்தே வைத்துக்கொண்டிருக்கின்ற பேரியக்கம்; அந்த உண்மையின் காட்சி வடிவம்தான் மதுரை மாவட்ட மாநாடாகும்; இந்தப் படையை வெல்ல எவராலும் முடியாது!"

பதவியை உதறித் தள்ளுவாரா சி. சுப்பிரமணியம்?

இந்திரா அமைச்சரவையைக் காப்பாறியவர்களா பாசிஸ்டுகள்?

இரா. செழியன் வினா

மதுரை, ஆக. 10—

நாடாளுமன்ற தி. மு. க. கட்சித் தலைவர் இரா. செழியன் அவர்கள் மதுரை மாநாட்டில் பேசுகையில் சி. சுப்பிரமணியம் கிருஷ்ணகிரி தேர்தலுக்குமுன் கலந்துகொண்ட விதத்தையும் -- அதற்குப்பிறகு பேசுகின்ற பேச்சையும் சுட்டிக்காட்டி, கலைஞர் தயவால் -- மத்திய அமைச்சரவையில் இடம்பெற்ற விதத்தையும் தெரிவித்தார்; அவர் பேசியதாவது :—

"மத்திய அமைச்சர்கள் சி. சுப்பிரமணியமும் -- மோகன் குமாரமங்கலமும் நம்மை மோசமாக விமர்சித்துப் பேசுகிறார்களென்றால், 'அது தனிப்பட்டவர்களின் பேச்சு' என்று எடுத்தக்கொள்ளக்கூடாது! அரசியல் முக்கியத்துவம்வாய்ந்த பேச்சு அது!

'தாய்ப் பசு சாதுவாகத்தான் இருக்கிறது -- கன்றுகள் தான் தள்ளுகின்றன' என்று முதலமைச்சர் கூறினார்; இதுபற்றி இன்னொரு பழமொழியும் உண்டு; 'தாய் ஓரடி பாய்ந்தால் குட்டி எட்டடி பாயும்' என்பார்கள்; இப்போது குட்டிகள் எட்டடி பாய்கின்றன -- தாய் ஓரடி பாய்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம், 'தி. மு. கழகம் ஒரு பாசிசக் கட்சி' என்று கூறியிருக்கிறார்; அவரைக் கேட்கிறேன் -- எத்தனை ஆண்டுகளாக இது பாசிசக் கட்சி? நீங்கள் கிருஷ்ணகிரியில் நின்றபோது ஆதரவு கேட்டுவந்தீர்களே -- அப்போது தி. மு. கழகம் பாசிசக் கட்சியாக இல்லையா? பாசிசக் கட்சிதான் என்றால், அந்த தி. மு. க-வின் ஆதரவை நாடியது ஏன்? அதைத் தூக்கி எறிந்திருக்க வேண்டாமா?

கோவையில் பொதுக்குழு நடந்தபோது தலைமையமைச்சர் இந்திரா காந்தி, இரண்டு முறை முதல்வரிடம் தொலைபேசி மூலம் பேச முயன்றார்; கலைஞர் அப்போது வெளியே போயிருந்தபடியால் அவருடன் பேச முடியவில்லை; மூன்றாவது முறையாக முயற்சி செய்து கலைஞருடன் பேசினார்.

"சுப்பிரமணியத்தை மத்திய அமைச்சராக ஆக்கப்போகிறேன்; உங்களுக்குச் சம்மதந்தானா" என்று கேட்டுவிட்டுத்தான், அமைச்சராக சுப்பிரமணியத்தை நியமித்தார்!

தி. மு. கழகம் பாசிசக் கட்சி என்றால், அந்த அமைச்சர் பதவியை அவர், ஒதுக்கித் தள்ளியிருக்க வேண்டாமா?

இந்திரா அமைச்சரவை கவிழ்க்கப்படும் நிலையில் இருந்தது; மொரார்ஜியும் -- ராம் சுபாக் சிங்கும் -- மற்ற கட்சியினரும் கவிழ்க்கத் துடித்துக்கொண்டிருந்தனர்; அப்போது தி. மு. கழகம் நினைத்திருந்தால், இந்திரா அமைச்சரவையைக் கவிழ்த்திருக்கமுடியும்; இந்திரா அரசைக் கவிழ்க்கும் ஆற்றல் இருந்தும் கவிழ்க்க முயற்சி செய்யவில்லை!

ஆனால் இங்கே 184 பேர் சட்டமன்றத்தில் நமக்கு இருக்கிறார்கள்; எனவே, சனநாயக ரீதியில் அதனைக் கவிழ்க்க முடியாது! கழக அரசைக் கவிழ்க்கும் ஆற்றல் இல்லாமலேயே அவர்கள் நம்மைக் கவிழ்க்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்!

ஆகவே, இதனைக் கழகத் தோழர்கள் உணர்ந்து -- இந்த மாநாட்டில் காட்டிய உணர்ச்சியையும் எழுச்சியையும் மேலும் வளர்த்தால், கழக அரசையோ -- கழகத்தையோ ஒன்றும் செய்துவிட முடியாது."

மின்சாரத் தட்டச்சுப்பொறி

சென்னையில் தயாராகிறது

புதுடில்லி, ஆக. 9—

"சென்னையில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம், தனது பலமுனைத் திட்டத்தின் ஒரு பகுதியாக மின்சாரத் தட்டச்சுப்பொறி (டைப்ரைட்டர்)களைத் தயார் செய்து வருகிறது"

என்று, மத்திய தொழில் வளர்ச்சித்துறை துணையமைச்சர் பேராசிரியர் சித்தேசுவர் பிரசாத், நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலை, தற்போது ஆண்டுக்கு 500 மின்சாரத் தட்டச்சுப்பொறிகளைத் தயார் செய்வதற்கான அனுமதி பெற்றுள்ளது; இது கூடிய விரைவில் ஆண்டுக்கு 12,000 மின்சாரத் தட்டச்சுப் பொறிகளைத் தயாரிக்கும் திறன் கொண்டதாக விளங்கும்; சில வெளி நாட்டு மூல சாதனங்கள் மட்டுமே இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும்; நடப்பு ஆண்டு இறுதி அல்லது அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் இத்தொழிற்சாலை மின்சாரத் தட்டச்சுப் பொறிகளை வெளியிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஒரு மின்சாரத் தட்டச்சுப் பொறியின் விலை சுமார் ரூ 3,000 ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னையில் நீர் ஆய்வுக் கழகம்

திட்டம் வகுக்கத் தொழில் நுணுக்கக் குழு

தென்கிழக்கு ஆசிய நாடுகள் அனைத்துக்கும் யோசனை கூறும் -- தமிழக அரசின் தீவிரத் திட்டம்

திருச்சி, ஆக. 9—

சென்னையில் நீர் ஆய்வுக் கழகம் ஒன்றை அமைக்கும் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக, நான்கு உறுப்பினர்கள் கொண்ட உயர் மட்டத் தொழில் நுணுக்கக் குழு ஒன்றைத் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நிறுவனம், தென் கிழக்கு ஆசிய நாடுகள் அனைத்துக்கும் நீர் ஆய்வு சம்பந்தமான யோசனைகளைக் கூறும் நிலையமாகத் திகழப்போகிறது; இதற்கு ஐ. நா. உதவியும் கிடைக்கும்.

அமைக்கப்பட்டுள்ள தொழில் நுணுக்கக் குழு ஒரு மாதத்தில் தனது அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு, ஐ நா. நீர் வளத்துறைத் தலைவர் டாக்டர் ஏ. அழகப்பன் திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு வருகை தந்தபோது நடைபெற்ற பேச்சின் போது இப்படிப்பட்ட ஒரு நிறுவனம் உருவாக்கும் யோசனை, கல்லூரியின் சார்பில் தெரிவிக்கப் பட்டது.

குறிக்கோள் என்ன?

பாசனத்துக்கும், தொழில் மற்றும் மக்கள் நலனுக்கும் அவசியமான நீர்த் தேவையைக் கணக்கிட்டு அரசுக்கு ஆலோசனை கூறி -- அதைச் சமாளிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் தெரிவிப்பதே நீர் ஆய்வுக் கழகத்தில் குறிக்கோளாகும்.

இரஷ்யாவிலுள்ள ஜோர்ஜியான் கைத்தொழில் நிறுவனத் துணை வேந்தர், திருச்சிப் பொறியியல் கல்லூரிக்கு வந்தபோது இத்திட்டம் குறித்து அவரிடம் கூறப்பட்டது; இத்திட்டத்தை அவர் வரவேற்றதுடன், நீர்வளப் பொறியியல் துறையில் பட்ட மேற்படிப்புத் துறையை ஏற்படுத்துவதற்குத் தமது உதவியைத் தருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

உவர்தர ஐ நா. அதிகாரிகள் இருவரும் இத்திட்டத்திற்கு உதவி செய்வதாகக் கல்லூரி நிர்வாகிகளிடம் உறுதி கூறியுள்ளனர்; இதற்கான திட்டத்தை மத்திய அரசு மூலம் அனுப்பிவைக்கும்படி அவர்கள் கூறினர்.

இதுகுறித்துக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி. எஸ். மணிசுந்தரம், செய்தியாளரிடம் தெரிவிக்கையில், 'மேல் மட்ட -- தரையடி நீர் வளம் பற்றி மதிப்பிடுவதுடன், அதை அதிகபட்ச நலனுக்காகப் பயன்படுத்தும் வழி முறைகள் குறித்தும் இந்தக் கழகம் திட்டம் தீட்டும்' என்றார்.

வங்காள தேசத்தில் இன்சூரன்சு நிறுவனங்கள் நாட்டுடைமையாயின

டாக்கா, ஆக. 9—

வங்காள தேசத்தில் இன்சூரன்சு நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டன.

இதற்கான உத்தரவு குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவு உடனடியாகச் செயலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு இன்சூரன்சு நிறுவனங்களில், பொது இன்சூரன்சுத் தவிர எல்லா இன்சூரன்சும் அரசுடைமையாக்கப்பட்டன.

இ. காங்கிரசு ஆட்சியின் 'அணுகு முறை' பாரீர்!

துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை நடத்த மறுப்பு

புதுடில்லி, ஆக. 9—

"பீகார் மாநிலத்தில் உள்ள ஹஜாரியாபாக் மாவட்டம் சிர்கா நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்மீது நடந்த போலீசுத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும்"

என்று நாடாளுமன்ற மேலவையில் சில உறுப்பினர்கள் கோரிக்கை வெளியிட்டனர்.

இந்தக் கோரிக்கையைத் தொழிலாளர் நலத்துறைத் துணையமைச்சர் பாலகோவிந்த வர்மா நிராகரித்தார்.

நிலக்கரிச் சுரங்க வேலைநிறுத்தம் பற்றியும் -- போலீசுத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றுக்குப் பதிலளிக்கையில், 'சட்டம் -- ஒழுங்கு நிலைமை மாநில அரசின் பொறுப்பாகும்; இதுபற்றிய புகார்களை மாநில அரசு கவனிக்கும்' என்றும் கூறினார்.

பெங்களூர், ஆக. 9—

"மைசூர் மாவட்டம் தவணகிரியில் உள்ள பருத்தி ஆலையில் ஒரு தொழிலாளி 'சஸ்பெண்டு' செய்யப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் கலவரத்தில் ஈடுபட்டதால் போலீசுத் துப்பாக்கிச் சூடு நடந்தது; அதில் 2 பேர் செத்தார்கள்.

துப்பாக்கிச் சூடுபற்றி விசாரணை நடத்த சித்ரதுர்க்கா துணைக் கமிஷனரை அரசு நியமித்தது; இதற்கு மைசூர் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்; 'தவணகிரி துப்பாக்கிச் சூடுபற்றி மாவட்ட நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நடத்தவேண்டும்' என்று உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

இந்தக் கோரிக்கைக்கு முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"தவணகிரி துப்பாக்கிச் சூடுபற்றிய உண்மை நிலவரத்தை அறிய தற்போது அரசு நியமித்திருக்கும் துணைக் கமிஷனரின் விசாரணையே போதும்; நீதி விசாரணை நடத்தமாட்டோம்."

நம்மை நாடாள வைத்தவர்கள் மக்கள்

சட்டமன்றத்தில் சனநாயகப் பண்பை வளர்த்தவர் அண்ணா

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். முழக்கம்

மதுரை, ஆக. 10—

"தி. மு. கழகம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை மாற்றார்கள் இப்போது உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

"கொட்டும் மழையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தைத் தொடங்கியபோது, இப்படிப்பட்ட மக்கள் கூட்டத்தைத் திரட்ட முடியும் என்று நினைக்கவில்லை.

"இந்த அளவுக்கு தி. மு. கழகம் வளர்வதற்கு நாம் எத்தனையோ பேரைப் பலி கொடுத்திருக்கிறோம்"

என்று இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி., மதுரை மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டினார்; அவர் பேசியதாவது :—

"ஆட்சியை தி. மு. கழகம் பிடிக்கவில்லை -- மக்கள் தான் தி. மு. கழகத்திடம் ஆட்சியை ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஒரு வகையில் நாம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறோம் என்றால், காமராசரும் அதற்குக் காரணமாக இருக்கிறார் என்று சொல்லலாம்.

வெட்டவெளியில் பேசிக் கொண்டிருந்த நம்மையெல்லாம், 'சட்டமன்றத்திற்குள் வரவேண்டும்' என்று அறைகூவல் விடுத்தவரே காமராசர்தான்!

அவர், 'தி. மு. கழகத்திற்குக் கூட்டம் கூடுகிறது என்கிறார்களே -- பைத்தியக்காரன் தெருவிலே போனால்கூடத்தான் கூட்டம் கூடும்; மக்களிடம் தி. மு. கழகத்தினர் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்கள் என்றால், சட்டமன்றத்திற்கு அல்லவா வர வேண்டும்' என்று ஒருதடவை கூறினார்.

அதன்படி தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிட்டது; முதல் தேர்தலிலேயே 15 பேராக வெற்றி பெற்றோம்; அப்போது என்னுடைய 'அண்ணா இல்லம்' திறப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக வந்த அன்றைய அவைத் தலைவர் டாக்டர் யு. கிருஷ்ணாராவ் பேசும்போது குறிப்பிட்டது இன்னும் எனது நினைவில் பசுமையாக இருக்கிறது; அவர் சொன்னார் :—

'பேரறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்துக்கு வந்த பிறகுதான், சட்டமன்றத்திலேயே சனநாயகப் பண்புகள் தேசிய ஆரம்பித்தது; சட்டமன்றம் எப்படி நடக்க வேண்டும் என்பதும் புரிந்தது" என்று!

'நாடகக்காரர்கள் நாடாளலமா' என்று நம்மைப் பார்த்து அன்று ஏளனமாகக் கேட்டார்கள்; இன்று, நாடகக்காரர்கள்தான் நாடாண்டு கொண்டிருக்கிறார்கள்!

முதல்வர் கலைஞர் அவர்களும் சரி -- நாவலர் அவர்களும் சரி -- பேராசிரியரும் சரி -- பலரும் அரிதாரம் பூசினவர்கள்தான்!

கலைத் துறையின் மூலம் மக்களிடையே கழகத்துக்கு நல்ல பிரச்சாரங்களைச் செய்து வந்திருப்பவர்கள் நாம்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் 'வேலைக்காரி' திரைப்படம் வந்தபோது கல்கி அவர்கள் அதைப் பற்றி விமர்சித்து எழுதுகையில், 'அண்ணா அவர்கள் நாட்டிற்கு ஒரு 'வேலைக்காரி'யைத் தந்தார்; நாட்டிலுள்ள குப்பைக் கூளங்களையெல்லாம் இந்த வேலைக்காரி போக்கிவிட்டாள்' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டிருந்தார்.

அதே கல்கி இன்னொரு முறை, 'இதோ -- ஒரு பெர்னாட் ஷா' என்று அண்ணாவைப் பற்றிப் புகழ்ந்து கட்டுரை எழுதினார்; அப்போது கலைவாணர்கூட, 'அண்ணாவைப்போல் பெர்னாட் ஷா என்று எழுதியிருக்க வேண்டும்' என்று அதற்கு மறுப்புத் தெரிவித்தார்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும், மக்களிடையே தி. மு. க-வின் இலட்சியங்களையெல்லாம் திரையுலகின் மூலம் பரப்பி வந்தார்!

இப்போது மன்றாடியாரைப் போன்றவர்கள், 'ஏழை விவசாயிகளைக் கொடுமைப்படுத்துகிறார் முதல்வர் கருணாநிதி' என்று கூறுகிறார்கள்.

கலைஞர் அவர்களை, டாட்டா -- பிர்லாவின் பரம்பரையில் பிறந்தவரைப்போல் கருதிக்கொண்டு பேசியதைப்போல் இருக்கிறது அது!

கலைஞர் அவர்கள் சாமானியமான குடும்பத்திலிருந்து வந்தவர்! அவருடைய சரித்திரம் வீர சரித்திரம்! எதிர்காலத்திற்கு வழிகாட்டும் சரித்திரம்!"

அண்ணாவுக்குத் துரோகம் செய்பவனா நான்?

'அகதி'களாகத் திரியும் துரோகிகளை அறிவேன்

பத்திரிகைகளின் பித்தலாட்டச் செய்திகளுக்கு நாஞ்சில் கி. மனோகரன் பதில்

மதுரை, ஆக. 10—

"பேரறிஞர் அண்ணா அவர்கள், தி. மு. கழகத்தைப்பற்றி ஒருமுறை கூறுகின்றபோது, 'குறுக்கும் நெடுக்குமாகப் பின்னப்பட்ட இழைகளைக் கொண்ட பாய்' என்று கூறி 'அதை யாராலும் கிழிக்க முடியாது' என்றார், அந்தப் பாயின் இழையாக இருக்கின்ற இலட்சோபலட்சம் தொண்டர்களில் ஒருவன் நான்"

என்று, நாடாளுமன்ற மக்களவை தி. மு. க. குழுத் தலைவர் நாஞ்சில் கி மனோகரன், மதுரை மாநாட்டில் பேசுகையில் உருக்கத்துடன் குறிப்பிட்டார்.

பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்தைக் கண்டித்து அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

"சில பேர் என்னைச் சந்தேகக் கண்ணோடு பார்ப்பது எனக்குத் தெரியும்; நான் இராஜினாமாச் செய்துவிட்டேன் என்றும், இனி தி. மு. க-வில் இருக்கமாட்டேன் என்றும், இந்திரா காந்தியின் காலடியில் தஞ்சம் புகுந்துவிடுவேன் என்றும் சில பத்திரிகைகள் எழுதின; அதைப்பற்றி விரிவாகச் சொல்ல விரும்பவில்லை; ஆனால் ஒன்று மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் எங்கோ பிறந்தவன்; என்னை ஆளாக்கி -- மக்களிடம் அறிமுகப்படுத்தி -- நாடாளுமன்றக் குழுத் தலைவனாக்கி -- இன்று நமது நெஞ்சில் நீங்காத இடம் பெற்று வங்கக் கடலோரத்தில் தூங்காமல் தூங்கிக்கொண்டிருக்கும் அண்ணா அவர்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டு நான் இந்தக் கழகத்திலிருந்து போய்விடுவேன் என்று எவராவது கூறினால், அவர்களை, 'மடையர்கள்' என்றுதான் கூறுவேன்.

நான் இராஜினாமாச் செய்துவிட்டேன் என்றால், அதற்குப்பிறகு என்ன இருக்கிறது? இந்த இயக்கத்திலிருந்து இராஜினாமாச் செய்தவரெல்லாம், 'அகதி'போல் தெருத் தெருவாக அலைந்து திரிந்ததைப் பார்த்தவன் நான்!

ஆகவே, 'அவர் இராஜினாமாச் செய்வார் -- இனி தி. மு. கழகம் வீழ்ச்சியடைந்துவிடும்' என்று எவராவது கூறினால், அவர்களுடைய மூளை பழுதுபார்க்கப்பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை!

இந்த இயக்கத்தில் பின்னிப் பிணைந்திருப்பவன் நான்; இந்த இலட்சியத்தில், இந்த இயக்கம் எனக்கு உயிரும் மூச்சுமாக இருக்கிறது; என்னைக் காப்பாற்றுவது கழகக் கண்மணிகள்!

உற்சாகமூட்டும் தலைமை கலைஞர் அவர்களின் தலைமை ஆகும்.

'முன்னேறு -- முன்னேறு' என்று என்னை ஊக்கப்படுத்துவது கழகம்.

ஆகவே, என்னைப்பற்றித் தவறான செய்திகளை வெளியிடுகின்ற பத்திரிகைகள் -- அதனால் அதிகமாக விற்பனையாகிக் காசு வருமானால் அந்தப் பிச்சைக் காசுகளைப் பெற்றுக்கொள்ளட்டும்; ஆனால், என் இதயத்தை மட்டும் புண்படுத்தவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

பின்தங்கிய பகுதிகளில் புதிய தொழில்கள்

20 நிறுவனங்கட்கு ரூ. 10 இலட்சம் உதவி

சென்னை, ஆக. 8—

தமிழ்நாட்டில் 10 பின்தங்கிய தாலுகாக்களில் துவக்கப்படும் 20 நடுத்தர -- சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை துவக்க ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு தொடங்கியுள்ள திட்டத்தின் கீழ் இந்த உதவித் தொகை அளிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாநில தொழில்கள் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

10 பின்தங்கிய தாலுக்காக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன; இவற்றில் ஏதாவது ஒன்றில் புதிதாகத் துவக்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு உதவித் தொகையோ அல்லது அந்த நிறுவனங்களில் போடப்படும் நிர்ணயிக்கப்பட்ட மூலதனத்தில் 10 சதவிகிதம் மானியமோ அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அளிப்பதற்கு ஒரு தொழில் நிறுவனத்தில் போடப்படும் நிர்ணயிக்கப்பட்ட மூலதனம் ரூ 50 இலட்சத்திற்கு அதிகமாக இருக்குமானால், நிறுவனங்களின் தகுதியையொட்டி அரசாங்கம் தனது யுக்த்யனுசார அதிகாரத் பயன்படுத்தி உதவித் தொகை வழங்கலாம்.

உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள 20 தொழில் நிறுவனங்களில் 2 நடுத்தர ரகமானவை; மற்றவை அனைத்தும் சிறு தொழில்களாம்.

விவசாயக் கருவிகள் -- அலுமினிய வளையங்கள் -- மரச் சட்ட ஊசிகள் -- மோட்டார் சைக்கிள் உறுப்புக்கள், இரசாயனங்கள் ஆகிய பொருள்களை இந்த 20 நிறுவனங்களும் தயாரிக்கும்.

இந்த 20 நிறுவனங்களில் சுமார் 600 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

பின்தங்கிய தாலுகாக்கள் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள தாலுக்காக்கள் வருமாறு :—

இராமனதபுரம் மாவட்டத்தில் -- இராமநாதபுரம், முதுகுளத்தூர், சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை திருப்பத்தூர் ஆகியவை.

மதுரை மாவட்டத்தில் -- மேலூர்.

திருச்சி மாவட்டத்தில் -- திருமயம், ஆலங்குடி, குளத்தூர் ஆகியவை.

மாநில சுயாட்சி இயற்கையானது

இன -- மொழி உணர்வுகளை அலட்சியத்தால் அடக்கிவிட முடியாது

கே. ஏ. கிருஷ்ணசாமி அறைகூவல்

மதுரை, ஆக. 10—

'மாநில – இன – மொழிப் பாதுகாப்பு – மேம்பாட்டு உணர்வினை அலட்சியப்படுத்தி அடக்கி ஒடுக்கிவிடலாம் என்று கருதுவது ஒருபோதும் பலிக்காது! பேசித் தீர்க்கக்கூடிய இப்பிரச்சினையை அலட்சியப்படுத்தி அடக்கு முறையில் இறங்கியதன் விளைவாகத்தான், இன்று பாகிஸ்தானத்திலிருந்து கிழக்கு வங்கம் பிரிந்து தனியாக வங்க தேசம் உருவாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இந்த வரலாற்று நிகழ்ச்சி தரும் பாடத்தினை எவரும் மறந்துவிடக் கூடாது – மறக்கவும் முடியாது'

என்று திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி., மதுரை மாநாட்டில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; அவர் பேசியதாவது :—

"மாநில சுயாட்சி என்பது வெறும் வட்டாரப் பிரச்சினை என்று கருதக்கூடாது; இது ஒரு இந்தியத் தேசியப் பிரச்சினையாகும்.

மாநில சுயாட்சிப் பிரச்சினையை, 'ஏதோ -- ஒரு அரசியல் கட்சிப் பிரச்சினை' என்று அலட்சியம் செய்திடக் கூடாது; இது, நாட்டின் மொத்தப் பிரச்சினையாகும்.

மாநில சுயாட்சி என்பது, இந்திய நாட்டில் உள்ள பல்வேறு தனிச் சிறப்புகளைப் படைத்துள்ள மாநில மக்களின் உரிமைக் குரலாகும்; இந்த உணர்வின் குரலினை, 'ஏதோ -- ஒரு போர்க் குரல்' என்று தவறாகக் கணக்கிட்டுவிடக் கூடாது; அதன் உண்மையான -- நியாயமான அடிப்படையை உணர்ந்து மதித்துப் பரிகாரம் கண்டாக வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இந்திய நாட்டில் இன்று மேற்கு வங்கம் -- பீகார் -- மகாராட்டிரம் -- தமிழகம் ஆகிய பல்வேறு மாநிலங்களிலும் தளிர்த்துத் தழைத்தோங்கி வரும் மாநில -- இன -- மொழி மேம்பாட்டுப் பாதுகாப்பு உணர்வினைத் தெளிவாகக் கூறமிடத்து -- மாநில சுயாட்சிக் கோரிக்கையை, வெறும் வட்டார உணர்வு என்றோ -- கட்சிப் பிரச்சினை என்றோ அல்லது போர்க்குரல் என்றோ மத்திய அரசு அலட்சியப்படுத்தி விடக் கூடாது! 'அடக்கிவிடலாம்' என்று கருதுவதும் பலன் அளிக்காது!

மாநில சுயாட்சிப் பிரச்சினையை, மாநில மக்களுடன் -- அவர்தம் பிரதிநிதிகளுடன் கூடிக் கலந்து பேசித் தீர்த்துவைப்பதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

இந்திய நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களின் இனம் -- மொழி -- கலை -- கலாச்சாரப் பாதுகாப்பு உணர்வுகளை மத்திய அரசு அணுகி வரும் முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும்.

மாநில சுயாட்சி உணர்வு இயற்கையானது; அது, நாட்டுப் பிரிவினை உணர்வு அல்ல -- தேசிய உணர்வு என்பதைக் கருத்தில் கொண்டு அணுகவேண்டும்.

இப்படிப்பட்ட அணுகுமுறை மூலம், மாநில மக்களின் உரிமைகளை மதித்து மாநில சுயாட்சி வழங்குவதன் மூலம்தான், வேற்றுமைகளுக்கு இடையிலும் இந்திய உணர்வினை முழுமையாக வளர்க்க முடியும்; பலமிக்க இந்திய நாட்டினையும் -- வளமிக்க மாநிலங்களையும் உருவாக்க முடியும்.

நமது இயற்கை உணர்வான மாநில சுயாட்சிக் கோரிக்கையை -- அதன் அடிப்படையை அவசியத்தை, மாநில மக்களுடன் -- அவர்களின் பிரதிநிதிகளுடன் மத்திய அரசு கூடிக் கலந்து பேசித் தீர்க்க வேண்டும்; அதற்கு மாறாக, இந்தத் தேசியப் பிரச்சினையை -- உரிமைக் குரலை மதிக்க மறந்து, அதனைப் போர்க் குரல் என்று தவறாகக் கருதி விடக் கூடாது.

பேசித் தீர்க்கப்பட வேண்டிய மாநில சுயாட்சிப் பிரச்சினையை மத்திய அரசு தனது தவறான அணுகு முறையினால் போராட்டப் பிரச்சினையாக்கி, நாட்டைப் போர்க்களமாக மாற்றிவிடக் கூடாது; நல்ல அணுகு முறை மூலம் பேசித் தீர்த்துப் பரிகாரம் காண வேண்டும்."

சென்னை -- வியாசர்பாடியில் . . .

டாக்டர் அம்பேத்கார் பெயரில் அரசினர் கலைக் கல்லூரி

முதலமைச்சர் கலைஞர் தலைமையில் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அடிக்கல் நாட்டுவார்

சென்னை, ஆக. 10-

சென்னை—வியாசர்பாடியில் டாக்டர் அம்பேத்கார் பெயரால் அரசினர் கலைக் கல்லூரி ஒன்று தவக்கப்படும்.

இதற்கான விழா, ஆகஸ்டு 15 சுதந்தர நாளன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்; மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜெ-ஜீவன்ராம், புதிய கல்லூரிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவார்.

இத்தகவலை, தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"28 ஏக்கர் நிலத்தில் வியாசர்பாடியில் அமையவிருக்கும் இந்தக் கல்லூரிக்கு ரு 5 இலட்சம் நிதி திரட்டப்படுகிறது; இது வரையில் ஒன்றரை இலட்சம் ரூபாய் சேர்த்துத் தரப்பட்டுள்ளது.

பம்பாயில் ஒரு கலைவிழா மூலம் ரூ. 50,000 திரட்டப்படுகிறது; ஆண்டு இறுதிக்குள் ரு 5 இலட்சம் திரட்டித் தரப்பட்டுவிடும்

அடுத்த கல்வி ஆண்டில் துவங்கும் இந்தப் புதிய கல்லூரி, முதலில் புகுமுக வகுப்புகளுடன் தொடங்கப்படும்."

சத்துணவு அளிக்கும் திட்டம்

திருப்போரூர் ஒன்றியத்தில் துவக்கம்

மதுராந்தகம், ஆக. 8—

"திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழுள்ள கிராமங்களில் ஆக. 10-ந் தேதி முதல் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் துவக்கப்படும்"

என்று திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

இத்திட்டம் எல்லாக் கிராமங்க 1974-க்குள் பரவிவிடும்.

சூதாட்டத்திற்குத் தடை

புதுடில்லி, ஆக. 9—

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தில் அவசரச் சட்டத்தின் மூலம் சூதாட்டத்துக்கு முழு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

அரசின் சீர்திருத்தக் கொள்கையின் அடிப்படையில் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மதுபானம் குடித்தல் -- வரதட்சணை வாங்குதல் ஆகியவற்றுக்கும் அங்கு அரசு தடை விதித்துள்ளது.

முந்தைய ஆட்சி புத்தகங்கள் -- பத்திரிகைகள் -- வார, மாத இதழ்கள் மீது விதித்த தடையை வட மேற்கு எல்லை மாகாண அரசு நீக்கிவிட்டதாகப் பாகிஸ்தான் வானொலி கூறியது.

ஒரு மனைவிக்குமேல் எந்த சமூகத்தினருக்கும் இருக்கக்கூடாது

சட்டம் இயற்ற யோசனை

புதுடில்லி, ஆக. 9—

"இந்தியாவில் முஸ்லிம்கள் உட்பட எல்லா சமூகத்தினரும் ஒன்றுக்குமேற்பட்ட மனைவிகளைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வரவேண்டும்"

என்று, மத்திய அரசுக்கு மாராட்டிய அரசு யோசனை கூறியிருக்கிறது; இதுபற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

இந்தத் தகவல், நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது.

நேர்முக வரி பாக்கி -- ரூ. 470.95 கோடியாம்

புதுடில்லி ஆக. 9—

"இந்த ஆண்டு மார்ச் மாதம் முடிய நேர்முக வரி பாக்கி ரூ. 470.95 கோடியாக இருந்தது"

என்று, நிதியமைச்சர் சவாண், நாடாளுமன்ற மேலவையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

திருவெறும்பூர் தொழிற்சாலையில் கொதிகலன்கள் உற்பத்தி

ரூ. 12 கோடி செலவாகும்

திருச்சி, ஆக. 8—

திருவெறும்பூரிலுள்ள பாரத் கனரக மின்சாரத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கொதிகலன்களின் மாதிரியையும் -- உற்பத்தித் தொழில் நுணுக்கத்தையும் நவீனப்படுத்த திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருக்கிறது.

இந்த ஆலையின் இரண்டாவது கட்டப் பணியாகத் துவக்கப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு ரு 12 கோடிக்குமேல் செலவாகும் என்று கூறப்படுகிறது.

திட்டம், இப்போது மத்திய அரசின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில் வருமானவரி அதிகாரிகள் திடீர் சோதனை

இலட்சுமணபுரி, ஆக. 10—

உத்தரப் பிரதேசத்தில் இலட்சுமணபுரி -- அலகாபாத் -- வாரணாசி -- லகீம்பூர் ஆகிய இடங்களில் இத்திங்கள் 3-ம் நாள் வருமான வரி அதிகாரிகள் திடீர்ச் சோதனைகள் நடத்தினர்; அதுபோது, ரூ. 50 இலட்சம் மதிப்புக்குப் பதுக்கப்பட்ட ரொக்கமும -- ஏராளமான சான்றேடுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

காங்கிரசு பெயர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து தலைமையில் உள்ள கட்சிக்கு 'தேசிய காங்கிரசு' என்றும் சட்டமன்றத்தைப் பொறுத்த வரை பெயர் வைத்துக் கொள்ளலாம்" என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பெயரை முதலில் திருமதி அனந்தநாயகி ஏற்றுக் கொள்ளவில்லை; மீண்டும் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன; கடைசியில் ஒருவாறாக அவரும் இதற்கு இணங்கினர்.

முதலமைச்சர் தெரிவித்த யோசனையை இரு கட்சியினரும் ஏற்றுக் கொண்டனர்.

குழுக் கூட்டம்

"பம்பாய் -- தாராவி தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 15—8—72 காலை 9-30 மணிக்கு எம். எல். வாடி கலை அரங்கில் நடைபெறும்" என்று செயலாளர் எல். என். செழியன் அறிவிக்கிறார்.

ஆனைமலையில் வனவிலங்குகள் புகலிடம்

அக். 1-முதல் திறக்கப்படும்

சென்னை, ஆக. 10—

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலையில், வனவிலங்கு புகலிடம் (சரணாலயம்) அமைக்கப்படுகிறது; அக்டோபர் 1-ம் நாள் முதல் பொதுமக்கள், இதனைப் பார்வையிடலாம்.

300 சதுர மைல் பரப்பளவில் இந்தப் புகலிடம் இருக்கும்.

காட்டுப் பகுதியில் வனவிலங்குகள் சுதந்தரமாகத் திரிவதை இங்கு நேரில் பார்க்கலாம்; இதற்காகக் காட்சி கோபுரங்கள் அமைக்கப்படும்; பயணிகள் தங்குவதற்கு விடுதியும் கட்டப்படும்; காட்டில் சுற்றிப் பார்க்க வாகன வசதியும் இருக்கும்.

ஆனைமலை வனவிலங்கு புகலிடத்தில் காட்டு யானைகள் -- காட்டெருமைகள் -- மான்கள் ஆகியவை உள்ளன; இது தமிழ்நாட்டில் ஏற்படும் 6-வது வனவிலங்குகள் புகலிடமாகும்.

ஆகஸ்டுத் தியாகிகளுக்கு மக்களவை அஞ்சலி

புதுடில்லி, ஆக. 10—

1942-ம் ஆண்டு ஆகஸ்டு 9-ம் நாளன்று, 'வெள்ளையனே -- வெளியேறு' என்ற இயக்கம் தொடங்கியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த நாளன்று உயிர்நீத்த தியாகிகட்கு நேற்று மக்களவை அஞ்சலி செலுத்தியது.

மேலவை கேள்வி நேரம்

மதிய உணவுத் திட்டம்

கல்வியமைச்சர் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 9—

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், மதிய உணவுத் திட்டம் பற்றி உறுப்பினர் கேட்ட கேள்வியும் -- அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:—

வெங்கா (தி. மு. க.):—"சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்க முயலும் இந்த நேரத்தில், மாணவர்கள் மனதில், 'மதிய உணவு சாப்பிடும் மாணவன் -- சாப்பிடாத மாணவன்' என்ற ஏற்றத்தாழ்வு நிலைமை ஏற்படுவதைத் தடுக்க மதிய உணவுத் திட்டத்தையே இந்த அரசு கைவிடுமா?"

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்:—"சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கும் வரை -- அது மாறினால் ஒழிய -- இந்த வேறுபாடு மனப்பான்மை மாறாது; ஏற்றத்தாழ்வை நீக்கவே ஊழி செய்து வருகிறோம்; இந்த மதிய உணவையும் நிறுத்திவிட்டால், ஏழைப் பிள்ளைகள் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்படக்கூடும்; அதைத் தவிர்க்க வேண்டும்; அந்த முயற்சிகளை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம்."

பட்டதாரி ஆசிரியர்கள்

சாமிநாதன (சுதந்தரா):—"பட்டதாரி ஆசிரியர்கள் குறையைத் தீர்ப்பது பற்றி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி இன்னும் நிறைவேறாததால், பட்டதாரி ஆசிரியர்கள் மீண்டும் போராட்டம் நடத்தப் போவதாக தெரிகிறதே -- அரசாங்கம் அதைப் பற்றி என்ன ஏற்பாடு செய்யப் போகிறது?"

அமைச்சர் நெடுஞ்செழியன்:—"பட்டதாரி ஆசிரியர்களைப் பல தடவை அழைத்துப் பேசியிருக்கிறோம். நேற்றுகூட அழைத்துப் பேசுவதாக இருந்தது; விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கப்படும்; போராட்டங்கள் நடத்தாமல் இருக்க உறுப்பினர்கள் எடுத்துக் கூறவேண்டும்."

கலப்படச் சட்டம்

சந்தோஷம் (ஐக்கியக் கட்சி):—"கலப்படச் சட்டத்தின்கீழ் சில்லறை வியாபாரிகள்தான் தண்டிக்கப்படுகிறார்கள்; நியாயமான மொத்த வியாபாரிகளும் -- உற்பத்தியாளர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆவார்கள்; ஆகவே, அவர்களையும் தண்டிக்கச் சட்டத்தில் வழி செய்யப்படுமா?"

அமைச்சர் அன்பழகன்:—"கலப்படத்தைத் தடுக்க மத்திய அரசு இயற்றிய சட்டம் பற்றிக் கருத்தறிவிக்கையில், 'மொத்த வியாபாரிகள் அகப்படுவதில்லை; மொத்த வியாபாரிகளையும் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும்' என்பதை நமது மாநில அரசு எடுத்துக் கூறியதை, மத்திய அரசு இப்போது உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது."

அலட்சியப்படுத்தவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் விளக்கங்கள் தருகிறோம்!

சென்னை, ஆக. 9—

கே. டி. கே. தங்கமணி:—"நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பார்வர்டு பிளாக் கட்சி ஆதரிக்கவில்லை; இந்த விவாதம் முடிந்த பிறகாவது ஆதரிப்பார்கள ......

[பார்வர்டு பிளாக் உறுப்பினர்கள்:—"இல்லை, இல்லை."

முதல்வர்:—"உங்கள் கட்சிக்குள்ளேயே சிலர் உங்களை ஆதரிக்கவில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்."

கே. டி. கே. தங்கமணி:—"உங்கள் கட்சியிலும் அப்படிப்பட்ட நிலை இல்லாமல இல்லை."

முதல்வர்:—"வலது -- இடது என்ற நினைப்பில பேசுகிறீர்களா?"

கே, டி. கே, தங்கமணி:—"நீங்கள் பெருபான்மையினராக இருப்பதால், மற்றவர்கள சொல்வதில நியாயமில்லை என்று சொல்லக் கூடாது -- மற்றவர்கள கருத்தை அலட்சியப்படுத்தவும் கூடாது."

முதல்வர்:—"உங்கள் தீர்மானத்தை அலட்சியப்படுத்தவுமில்லை -- புறக்கணிக்கவுமில்லை; 'அலட்சியப்படுத்தவில்லை' என்பதற்கு அடையாளமாகத்தான் நீங்கள் பேசும்போது குறுக்கிட்டு விளக்கங்கள் தருகிறேன்."

உதவி கோரி 75,000 மனுக்கள்

"சுதந்தரப் போராட்ட வீரர்கள் பென்ஷன் திட்டத்தின் கீழ் உதவி கோரி 75,000 மனுக்கள் அரசுக்கு வந்துள்ளன"

என்று உள்துறை துணையமைச்சர் கே. சி. பந்த், மக்களவையில் தெரிவித்தார்.

"சுதந்தரப் போராட்ட வீரர்கள் பென்ஷன் திட்டம் இத்திங்கள் 15-ந் தேதியிலிருந்து செயலுக்கு வருகிறது; இதுவரையில 2,500 பேர்களுக்குப் பென்ஷன் வழங்க ஒப்புதல அளிக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

கிராமப் பகுதிகளில் நல்வாழ்வுத் திட்டம்

ரூ. 152 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, ஆக. 10—

"அடுத்த மூன்று ஆண்டுகளில இந்தியாவில கிராமப் பகுதிகளில மருத்துவ -- நல்வாழ்வுத் திட்டங்களுக்காக அரசு ரூ. 152 கோடி செலவிடவிருக்கிறது"

என்று மத்திய நலவாழ்வுத் துறை துணையமைச்சர், நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

9,153 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டனர்

ரூ. 13.66 கோடி மதிப்புள்ள பொருள் பறிமுதல்

புதுடில்லி, ஆக. 10—

"கடந்த (1971-ம்) ஆண்டில், நம நாட்டில் 9,158 கடத்தல்காரர்கள் பிடிபட்டனர்; அவர்களிடமிருந்து ரூ. 13.66 கோடி மதிப்புள்ள தங்கம் -- வெள்ளி -- கைக் கெடிகாரங்கள் -- அந்நிய துணிகள் முதலிய கடத்தல பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன"

என்ற தகவலை, மத்திய நிதியமைச்சர் ஒய். பி. சவான, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

"குசராத், மாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் கடல மார்க்கமாகவும், இந்தியா—நேப்பாள எல்லையில தரை மார்க்கமாகவும்தான பெரும் அளவில் கடத்தல்கள நடைபெற்றன; இங்குதான் கடத்தல்காரர்கள பலர் கைது செய்யப்பட்டனர்" என்றும் அவர் தெரிவித்தார்.

இராமேசுவரம்-பாம்பன் இடையே சாலைப் பாலம்

மத்திய அரசு ஒப்புதல்

மேலவையில் அமைச்சர் சாதிக் பாட்சா தகவல்

சென்னை, ஆக. 10—

இராமேசுவரத்திற்கும் -- பாம்பனுக்கும் இடையே கடலில் சாலைப் பாலம் அமைக்கும் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து விட்டது.

இத்திட்டம் பற்றித் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில உறுப்பினர் கேட்ட கேள்வியும் -- பொதுப் பணி அமைச்சர் எஸ். ஏ. சாதிக் பாட்சா அளித்த பதிலும் வருமாறு:—

ஈசுவரமூர்த்தி (ப. காங்.):—"இராமேசுவரத்துக்கும் -- பாம்பனுக்கும இடையே சாலைப் பாலம் அமைக்கும் திட்டம் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதா?"

அமைச்சர்:—"ஆம்; பாலத்துக்கான ரு 4,81,86,000 திட்டத்திற்கும், இணைப்புச் சாலைக்காக ரூ. 51.01 இலட்சத்திற்கான திட்டத்திற்கும மத்திய அரசு மார்ச் திங்கள் ஒப்புதல கொடுத்துவிட்டது.

"தலைமைப் பொறியர், இந்தத் திட்டத்துக்கு 'டெண்டர்' கோரியிருக்கிறார்; வேலை தொடங்கிய மூன்றாண்டுக் காலத்திற்குள், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்."

இப்போது, பாம்பன் -- இராமேசுவரம் இடையே கடலில் இரயில் பாலம் உள்ளது; அதற்கு அருகில், பஸ் -- கார் -- வண்டி முதலிய மற்ற வாகனங்கள் போவதற்காகச் சாலைப் பாலம் அமைப்பதே இந்தத் திட்டமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

'இந்தித் திணிப்பு இந்தியாவையே உடைக்கும்'

முன்னாள் தலைமை நீதிபதி எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 30—

"இந்திமொழி உயர் நீதிமன்றங்களில் கொண்டுவரப்படுமோனால் துரதிர்ஷ்டவசமான விளைவுகள்தான் ஏற்படும்; அது இந்தியாக நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும்"

என்று சட்டக் குழுத் தலைவரும் தலைமை நீதிம... தலைமை நீதிபதி... கஜேந்திர கட்... விடுத்தார்...

ஜவகர்... பொழிவ...

களை நிறைவேற்ற வேண்டுமானால் -- இந்திய சனநாயகம் தனது புரட்சிகரமான சமூக-- பொருளாதார நடவடிக்கைகளில் மேல் நோக்கி ஏன் னேற நீதிமன்றம் உதவியாக இருக்க... உயர் நீதிமன்ற... மன் ம...

மத்திய அமைச்சர்கள் சுற்றுப்பயணச் செலவுகள் -- இரு மடங்காக அதிகரிப்பு

நாடாளுமன்றத்தில் தகவல்

புதுடில்லி, நவ. 30—

நாடாளுமன்ற மேலவையில், மத்திய அமைச்சர்களின் சுற்றுப் பயணங்களுக்காக எவ்வளவு செலவாயிற்று என்ற தகவலை உள்துறை துணையமைச்சர் எப். எம். மோசின் தெரிவித்தார்; அது வருமாறு:—

"1970--71-ல் அமைச்சர்களின் சுற்றுப்பயணங்களுக்காக... 18...

சாதி முறைகளை ஒழிக்க வேண்டும்

தீண்டாமைக்கு அதுவே அடிப்படை

கலப்புத் திருமணத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் தருவது அவசியம்

சிறந்ததையே தெரிந்தெடுப்போம்

அவளுக்கு ஒரு தமிழ்... பிசுச் சீட்டு... அளியங்கள். தமிழ்... ரூபா...

...

வழி...

1975-ம் ஆண்... ளில் ஒரு நாள், ... நாளாக இருக்கும் ... வெளியிலே அமெரிக்க விண்வெளி விமானிகள் இரஷ்ய விண்வெளிக் கப்பலுக்குள்ளும் -- இரஷ்ய விண்வெளி விமானிகள் அமெரிக்க விண்வெளிகப்பலுக்குள்ளும் நுழைவார்கள் -- இரண்டு கப்பல்களும் விண்வெளியிலே திட்டமிட்டபடி இணைந்த பின்னர்!

அந்த நாள் வருவதற்குமுன் அமெரிக்காவும் -- இரஷ்யாவும் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது.

இரஷ்யக் கப்பல் -- சோயுஸ்; அமெரிக்கக் கப்பல்--அப்பாலோ; இவ்விரண்டின் மின்விசை அமைப்புகள் வேறுபட்டவை; சூழ்நிலைகளும் மாறுபட்டவை; இவற்றை எப்படி இணைப்பது?

"இவை மட்டுமா -- இன்னும் எவ்வளவோ பணிகள் இருக்கின்றன" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றனர் அதிகாரி...

...ர்; மே... வெகு தெ... விரைவில்... ள் இப்... அத்தனையையும் முடிக்கவேண்டுமே' என்று கவலைப் படுகின்றனர்.

அடுத்த மூன்றாண்டுக் காலத்திலே மேற்கொள்ளப்படும் சோதனைகளில் விண்வெளியில் இரண்டு நாள் நடக்கும் விண்வெளிக் கப்பல் இணைப்புதான் தலையாய பணியாக இருக்கும்; இரஷ்ய விமானிகள் அமெரிக்கக் கப்பலுக்குள்ளும் -- அமெரிக்க விமானிகள் இரஷ்யக் கப்பலுக்குள்ளும் ஊர்ந்து செலவர்; அனைத்து உலகமும் இந்த ரஷ்ய -- அமெரிக்க விஞ்ஞான ஒத்துழைப்பினை டெலிவிஷன் மூலம் (தொலைக் காட்சி) காண்பர்.

இவ்வாறாக விஞ்ஞான--தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒன்று உருவாகும்; அது உலகிலே கோடிக்கணக்கான மக்களின் வாழ்வு மலர வகை செய்யும்!

...பொறுப்புடைய... கும் -- தூய மாணவர்க்கும் இடையே நிலவும் தொடர்பாகும்.

இத்தொடர்புக்கு ஊறு நேரிடும் வகையில் அண்மையில் பாளையங்கோட்டை பேராசிரியர் ஏ. சீனிவாசன் அவர்களுக்குநேர்ந்த நிகழ்ச்சி -- அதனையொட்டிநடைபெற்ற விரும்பத்தகாத செயல்களும் பெரிதும் வருந்தத்தக்கனவாகும்; ஆகவே, பேராசிரியர் ஏ. சீனிவாசன் அவர்களுக்கு எமது தூய பரிவினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அந்நிகழ்ச்சி குறித்துத் தேவையான நடவடிக்கைகளை--முறைப்படியான நீதி விசாரணையை விரைந்து மேற்கொண்டுள்ள தமிழ்நாட்டு அரசின் செயல் எமக்குப் பெரிதும் ஆறுதலளிக்...

...ஆசிரியர்களும் -- மாணவர்களும் -- பெற்றோர்களும் ஆகிய முத்தரத்தினரும் அரசியல்வாதிகளின் தூண்டுதல்களுக்குச் சற்றும் இடமளிக்காது முழுமையாக நல்கும் கூட்டுறவினால்தான் கல்விப் பயிர் செழிக்க முடியும்.

மற்றவர்கள் இக்கூட்டுறவுக்குத் துணையாகப் புறத்தே நின்று உதவ வேண்டுமேயன்றிப் பிற வகையில் ஊறு விளைவிக்கக் கூடாது.

பெற்றோர்கள் சற்றுக் கூடுதலான பொறுப்புடன் தம் கடமைகளைச் செய்வார்களாயின், தமிழகக் கல்விப் பணி செம்மையாக நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விழைகின்றோம்."

அருப்புக்கோட்டை, ...வ. 30—

அருப்புக்கோட்டை நகர தி.மு.க. செயலாளர் ப. பெ. ந. நல்லதம்பி அறிவிப்பதாவது:—

"'தினமலர்' நெல்லைப் பதிப்பில் அருப்புக்கோட்டையில் எம். ஜி. ஆர். கட்சி அமைப்புக் கூட்டம் நடந்ததாகவும், அதில் கலந்து கொண்ட 500 உறுப்பினர்களும் தி. மு. கழகத்திலிருந்து பிரிந்து எம் ஜி ஆர். கட்சியில் சேர்ந்து விட்டதாகவும், அதனால் தி.மு.க. சோர்ந்துவிட்டது போலவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி உண்மைதான் என்று அந்த ஏட்டின் ஆசிரியரால் மெய்ப்பிக்க முடியுமா?

அந்த 500 பேர்களின் பெயர்களையும், உறுப்பினர் எண்களையும் அவர் வெளியிடுவாரா?"

...என்று ... தாங்க ... யாமல் விழுவது உறுதி' என்றும், 'எப்போது விழும் என்பதுதான் பிரச்சினை' என்றும் 'எப்போது விழும் என்பது தான் பிரச்சினை' என்றும் பலரும் நம்பும்படி இருந்தது.

ஆனால், கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்ட 'வாக்காளர் பேரணி' படுதோல்வியாக முடிந்திருக்கிறது; 'எம். ஜி. இராமச்சந்திரன் தனது கட்சியின் சார்பில் கோரப்பட்ட வெற்றி விழா பற்றியெல்லாம் மறுபரிசீலனை செய்வது அத்தியாவசியம்' என்று கூறும் அளவுக்கு 'வாக்காளர் பேரணி' படுதோல்வியாக...

...கூ... ...ழ்நாடு ...வேறு நகரங்களி... ...ருந்தும் வந்துள்ள தகவல் ...கூறுகின்றன.

...யில் முதல்வரின் இல் ...க்கு அணிவகுத்துச்...

...வல்லர்--- ...ன்! ...துவோ!

சேலம், நவ. 29—

நிருபர்:—"இப்பொழுது ஏற்பட்டுள்ள விளைவுகளுக்கும் பிறகு புதிதாகத் தி. மு. க. உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு ஏதாவது தீவிரத் திட்டம் எடுக்க எண்ணியிருக்கிறீர்களா?"

கலைஞர்:—"கட்சியிலிருந்து கட்டுப்பாட்டை மீறியதற்காகவும், வேறு பல ஒழுங்கீனங்களுக்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்பட்டவர்கள் சிலர் அந்தக் கட்சியில் சேர்ந்திருக்கிறார்கள்; பலர் அல்லர்—சிலர்தான்."

...யல் கருத்துகளை ... வேண்டியதில்லை."

அகதிகள் வரி மூலம் மத்திய அரசுக்குக் கிடைத்த வருமானம்

புதுடில்லி, டிச. 2—

அகதிகள் வரி மூலம் மத்திய அரசுக்கு 9.47 கோடி வருமானம் கிடைத்திருக்கிறது.

வங்காள தேசத்திலிருந்து ...கதிகள் இந்தியாவுக்கு வந்... தைத் ... அவர்களைப் பராமரிப்பதற்காக அகதிகள் வரியை மத்திய அரசு விதித்தது.

இதுபற்றி, நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி கேட்கப்பட்டது; அதற்குப் பதில் அளிக்கையில் வருமான அமைச்சர் கே. ஆர். கணேஷ் கூறியதாவது:—

"அகதிகள் வரி மூலம், ஒரே ஆண்டில் மத்திய அரசுக்கு ரூ. 9.47 கோடி வருமானம் கிடைத்திருக்கிறது.

இதுதவிர, மாநில அரசுகளுக்கு அகதிகள் வரிமூலம் கிடைத்த தொகை: ரூ. 9 54 கோடியாகும்."

தி. மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்

முடிவுகள் பற்றிக் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 2—

"கடந்த 26-ந் தேதியன்று எம்.எல்.ஏ. ...க்களுக்கு கொடுக்கப்பட்ட மனுக்களில், 'எம்.எல்.ஏ.-க்க... ள் இலஞ்சம் வாங்கினர்கள்' என்று குறிப்பிட்டிருந்தன ...தையொட்டி, அந்த மனுக்கள் கொடுத்தவர்கள் — மனுக்க... ளில் கையெழுத்துப் போட்டவர்கள் அனைவர் மீதும் ... க்குத் தொடரப் முடிவு செய்யப்பட்டது.

"அந்தந்தப் பகுதிகளில் உள்ள எம்... கள் இந்தக் கிரிமினல் வழக்குகளைத் தொடரு... வுபோல் அமைச்சர்களும் வழக்குத் தொடரு...

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்க... ளிடம் விளக்கித் தெரிவித்தார்; சட்டமன்... பினர்கள் கூட்டம் நேற்று மாலை நடைபெற்ற... பின், இம்முடிவைக் கலைஞர் அறிவித்தபின், ... கேட்டதாவது :—

"நாளை சட்டமன்றம் கூடுகிறதே வேறு ஏதாவது முடிவுகள் எடுக்கப்பட்டதா ?"

கலைஞர் :—"அண்ணா வழியில் நடப்போம் — சனநாயகத்தைக் காப்போம்."

கைவிடப்பட்டது

தொடர்ந்து அவர் கூறியதாவது :—

"சனிக்கிழமை ஆயிரம்விளக்குத் தோழர்களும் — வாக்காளர்களும் சபாநாயகர் மதியழகன் வரும் வழியில் கறுப்புக் கொடி காட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்; நானும் — பொதுச் செயலாளர் நாவலரும் அவர்களை அழைத்து நடவடிக்கையைக் கைவிடுமாறு கூறியிருக்கிறோம்; எனவே, அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது."

செ... எம். ஜி. ஆ...

சென்னை ... ஆர். ம... பொது உ... 19—11—72 ... எம்.ஜி.ஆர். ... நடவடிக்கை ... வரவேற்றும் ... ஜி. ஆர். ... என்ற ... பொ... பெயர... கழ... த...

...தமானில் 'தமிழ்ப்பயிற்றுமொழி

புதுடில்லி, டிச. 2—

"அந்தமானிலுள்ள ஏராளமான தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழில் பாடம் கற்பிப்பதற்கு வசதி செய்துதர வேண்டும்" என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் ஜி. ஏ. அப்பன் வற்புறுத்தினர்.

"தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட உயர் நிலைப் பள்ளி ஒன்றைத் தொடங்கக் கோரி சிலர் அந்தமான் செக்ரடேரியட் அலுவலகத்துக்கு வெளியே உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்" என்றும் அவர் சொன்னர்.

... 141

...மையில் ...கூட்டம்

...ம்பிக்கையில்லாத் ...றைவேற்றம்

...டத்தின்மீது விவாதம்

சென்னை, டிச. 2—

...யின் தலைவர் கே. ஏ. மதியழகன் ... இன்று சட்டப் பேரவையில் நிறை...

...ர்களின் ஆதரவுடன் இத்தீர்மானம் ...ணத் தலைவரான திரு. பெ. சீனி... நடைபெற்றது.

...ஆற்காடு வீராசாமி முன்மொழிந்தார்; ...வை முன்னவருமான நாவலர் பேசி...

...மானம் நிறைவேற்றப்பட்டது.

... என்கின்ற ...

...பேசினர் ?— ...ாகப் பிரியும்; ...றகு மறுத் ...திய அரசு ...ர் நிலைமை!

...ம், 'தி. மு. க. ...ன காரணத் ...

...தாம் — இன்று ... விட்டோம்—

...றி பெற்றோம்; ...கம் ஆகியவை ...டுகள் பிரிந்து ...

...கோபுரம் கட்டி ... இங்கே சோரம் ...ர் காரணமாக ...து விடுவதா—

...டுப்பாட்டை ...தால், அந்தக் ...

...க எடுத்தக் ...யிருக்கிறர்!

..., யாராவது அப் ...விட்டு — இவர்கள் ... கொள்வார்கள்" ... அப்படிச் சொன் ...

...வில்லை; முன்னல் ...ள் யார் — என்று ...கொள்கிறேன்."

திரு. வெ. சீனிவாசன் பேரவையின் தலைமையேற்றவுடன், மின்சாரத் துறை வரவு—செலவுத் திட்டத்தை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1972–73-ம் ஆண்டுக்கான இரண்டாவது துணைமான்யக்கோரிக்கை அறிக்கையை அறிவித்தார்; அது குரல் வாக்குகள் மூலம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள், மின்சாரவாரிய வரவு-செலவுத் திட்டத்தை முன் மொழிந்தார்.

அதனை ஆதரித்துக் கழக உறுப்பினர்களான வீராசாமி, வை. பாலசுந்தரம், ஈரோடு சின்னசாமி, கோ. இளங்கோவன், பொன். சொக்கலிங்கம், இராசு, ஆ. முனியாண்டி, தொ. மு. சீனிவாசன், நா. கணபதி, சி. வி. எம். அண்ணாமலை, செம்மனூர்கோவில் கணேசன், கரிவேங்கடம், வெ. கிருஷ்ணமூர்த்தி, முஸ்லிம் லீக் உறுப்பினர் வகாப், பார்வர்டு பிளாக் உறுப்பினர் கந்தசாமி ஆகியோர் மின்சார வாரிய வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசினர்.

விவாதம் பிற்பகல் 2 மணிக்கு மேலும் தொடர்ந்து நடைபெற்றது.

(செய்தி முடியவில்லை)

...சர் கலைஞர்

(...ழ. க. மாணவர் சிறப்புக் கூட்டத்தில்)

வேடந்தாங்கலுக்குப் பறவைகள் வரவு

குறைந்துள்ளதாகத் தகவல்

மதுராந்தகம், நவ. 30—

வேடந்தாங்கல் ஏரி தண்ணீர் இல்லாமல் வறண்டிருப்பதால், வழக்கமாக இந்தப் பருவத்தில் வரக்கூடிய வெளிநாட்டுப் பறவைகள் வரவில்லை.

வேடந்தாங்கல் ஏரிக்கு நவம்பர் — மாதங்களில் ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்குவது வழக்கம்.

பலவகையான பறவைகள், பல நிறங்களில் காணப்படுவது — பார்ப்போர் கண்களுக்கு விருந்தாக அமையும்; பயணிகளும் —களும் — சுற்றுப்புற ஊர் மக்களும் அவைகளைப் பார்த்து மகிழத் திரளாக வருவார்கள்.

ஆனல், இந்த ஆண்டு வெளிநாட்டுப் பறவை இனங்கள் வந்து சேரவில்லை; உள்நாட்டுப் பறவைகளும் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

இது சுற்றுலாப் பயணிகளுக்கும், பார்வையாளர்களுக்கும் பெரும் ஏமாற்றமாக இருக்கிறது.

அந்தமான் தீவின் பெயர் மாறும்

புதுடில்லி, டிச. 2—

"அந்தமான் — நிகோபார் தீவுகளின் பெயரை 'தியாகிகளின் பூமி' (சாகீத் ஸ்வராஜ் தீவுகள்) என்று மாற்ற வேண்டும்" என்று மக்களவையில் எழுப்பப்பட்ட கோரிக்கைக்கு ஒருமனதான ஆதரவு கிடைத்தது.

"பெயரை மாற்றுவதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்" என்று தனி நபர் மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டது.

"உறுப்பினர்களின் கருத்தை மதித்து அரசு உரிய ஆலோசனைகள் மேற்கொள்ளும்" என்று அமைச்சர்கள் உறுதியளித்தனர்.

தஞ்...

குறு...

தஞ்சை ம... ஆண்டு குறு... விகிதம் அதிகரி... தெரிகிறது.

ஏக்கர் ஒ... விகிதம் இர... மூட்டை நெல் ... என்று வேளா... கிறது; கூடு... இலட்சம் ஏக்... சல் தரும் 'கரு... படி செய்தத... உரங்களைப் ... மான கால நி... கூடுதல் விளை... காரணங்க... ஆண்டு இதே ... ஏக்கரில் சாகுப...

"குறுவைச் ... உள்ள மொத்... இலட்சம் ஏ... இலட்சம் டன்... எதிர்பார்க்க... வேளாண்மை... ஒருவர் கூறினு...

சென்ற ஆ... சாகுபடி செய்ய... குறைவாக ... விளைச்சலும் ... நடப்பு ஆண்... இலட்சம் ஏக்... ரகம் மீதமுள்... சாகுபடி செய்ய...

தமிழக இ... மத்திய அ...

அமைச்சர் ப... தரும் ...

"இந்திய உணவு... ஓம் — மாநில ... கார்ப்பரேஷனும் ... செய்த இருபதி... டன் அரிசியை... குத் தர தமிழ... திருக்கிறது"

என்று, உணவு... ப. நாராயணச... நிருபர்களிடம் ... நாட்டிலிருந்து ... சியை மத்திய ... வும், ஆனல் ...விவ... வதற்கு இயலாது எ... அரசு தெரிவித்ததாக... சர் குறிப்பிட்டார்.

"மாவட்ட ...லகஜ... திலும் நியாய விலை... யமையாப் பண்டங்க... காக விநியோக ... திறக்க அரசு ... கிறது" என்றும் ... தார்.

"இத்தகைய நி... துவக்க திருச்சி... நகர்களில் ஏற்கனவே... கள் செய்யப்பட்டுவிட்ட... ஞர்.

புதுடில்லி, நவ. 30—

"செப்புக் கம்பிகள் திருடப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் மாநில முதலமைச்சர்களின் உதவியைக் கோரி அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறர்"

என்று, அஞ்சல் — தந்தித் துறை அமைச்சர் எச். என். பகுகுணா மக்களவையில் தெரிவித்தார்.